11 JAN 2017

சுருக்கம்

பணியாளர் தொகுதி – நெடுஞ்சாலைத் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணையடிப்படை பணி நியமனம் – காலஞ்சென்ற ஏ.செல்வராஜ் துலக்குநர் என்பவரின் மகன் திரு செ.ராபர்ட் சகாயராஜ் தட்டச்சராக பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.எம்.1) துறை

அரசாணை (3டி) எண்.3

நாள் 06.01.2017
துன்முகி-மார்கழி 22, திருவள்ளுவராண்டு 2047

படிக்கவும்:–

1. அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை, நாள் 03.08.1977.
2. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5 கடித எண். நிர்.7(2)/ 6713/2009, நாள் 29.10.2009, 23.4.2010, மற்றும் 10.6.2010.
3. செயலாளர், தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடித எண். 6478/ சிடி–A1 /2016, நாள்:08.12.2016.

----------

ஆணை:–

நெடுஞ்சாலைத் துறையில் கும்பகோணம் தெற்கு பிரிவு அலுவலகத்தில் துலக்குநராகப் பணியிலிருந்த போது ஏ.செல்வராஜ் என்பவர் 03.01.1993 அன்று காலமானார். இவரது பணி துலக்குநர் பதவியில் 01.01.1979 முற்பகல் முதல் வரன்முறை படுத்தப்பட்டுள்ளது. இவரது மனைவி திருமதி செ.மாரியம்மாள் கேட்டுக் கொண்டதன் பேரில் இவரது மகன் திரு செ.ராபர்ட் சகாயராஜ் என்பவர் நெடுஞ்சாலைத் துறையில் கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 07.10.2008 முற்பகல் முதல் பணியாற்றி வருகிறார். இவர் பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளார் மேலும், தொழில்நுட்ப கல்வித் தகுதியான தட்டச்சு தமிழ் இளநிலையிலும் மற்றும் ஆங்கிலம் முதுநிலையிலும் தேர்ச்சி பெற்றுள்ளார். அரசு ஊழியர் இறந்த நாள் அன்று தனியரின் வயது13 ஆண்டுகள் ஆகும். அவர் பணியில் சேரும் போது 28 வயது நிரம்பப் பெற்றுள்ளார். எனவே, தனியர் தட்டச்சர் பணியிடத்திற்கான கல்வி மற்றும் வயது குறித்த தகுதிகளை நிறைவு செய்துள்ளதாக முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை தெரிவித்துள்ளார். இவர் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர். இவரது குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் துறையில் பணி புரியவில்லை என்பதற்கும், இவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்பதற்கான சான்றுகளையும் மற்றும் இவரது பணி வரன்முறைக்கு தேவைப்படுகின்ற அனைத்து மூலச் சான்றுகளையும் அரசுக்கு முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை சமர்ப்பித்துள்ளார்.

2. அரசாணை (நிலை) எண். 560, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை, நாள்: 03.08.1977–ல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி கருணை அடிப்படையில் தட்டச்சராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு செ.ராபர்ட் சகாயராஜ் என்பவரின் பணியினை இவர் பணியில் சேர்ந்த நாளான 07.10.2008 முற்பகல் முதல் தட்டச்சர் பதவியில் பணி வரன்முறை செய்வதற்கு ஏதுவாக அரசின் ஆணையினை பெற்றுத் தருமாறு முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை அவர்களது செயற்குறிப்பை அரசு நன்கு பரிசீலனை செய்து, 1954–ம் ஆண்டின் தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளில், ஒழுங்குமுறை 16(பி) பிற்பகுதியின்படி, நெடுஞ்சாலைத் துறையில் கும்பகோணம் தெற்கு பிரிவு அலுவலகத்தில் துலக்குநராக பணியிலிருந்த போது 03.01.1993 அன்று காலமான (திரு) ஏ.செல்வராஜ் என்பவரின் மகன் திரு செ.ராபர்ட் சகாயராஜ் என்பவரை கருணையடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் நெடுஞ்சாலைத் துறையில் 07.10.2008 முற்பகல் முதல் தட்டச்சர் பதவியில் பணி வரன்முறை செய்வதற்கு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு கோரப்பட்டது. இதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தனது இசைவினை அளித்துள்ளது.

4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை ஏற்று, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் நெடுஞ்சாலைத் துறையில் கருணையடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திரு செ.ராபர்ட் சகாயராஜ் என்பவரின் பணியினை 07.10.2008 முற்பகல் முதல் தட்டச்சர் பதவியில் பணி வரன்முறை செய்ய தனியர் அப்பதவியில் பணி நியமனத்திற்குரிய போதிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை, நாள் 03.08.1977, பத்தி 6 மற்றும் அரசு கடித (நிலை) எண்.202, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை, நாள் 08.10.2007ஆகியவற்றுக்கு தளர்வளித்து பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வுகள், நிலுவை தொகை இருப்பின், தனியர் அவற்றை பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இந்த அரசாணை, தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.கு. எண்25736/க்யு2/2016/1, நாள்:03.01.2017–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ராஜீவ் ரஞ்சன்,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்

முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை – 25.
திரு செ.ராபர்ட் சகாயராஜ், தட்டச்சர்
(முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை–25 வழியாக.)
மாநில கணக்காயர், சென்னை-600018.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3. (கடித எண். 6478/சிடி–A1 /2016, நாள்:08.12.2016. தொடர்பாக)
மாண்புமிகு அமைச்சர் (பொதுப்பணி , நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,சென்னை–600 009
கூடுதல் தலைமைச் செயலரின் செயலரின் தனிச் செயலர், நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் துறை, சென்னை–9

<u>நகல்:–</u>

தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறை, சென்னை–600009.
பணியாளர் (ம) நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–600009.
இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
9/1/2017